TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8029177

1. District : தூத்துக்குடி
மாவட்டம்

PS: ஊழல் தடுப்பு (ம) கண்காணிப்பு
காவல்நிலையம் துறை தூத்துக்குடி

Year: ஆண்டு 2019 FIR No.: முத.அ. எண் 03/2019 Date: நாள் 22.02.2019

2. (i) Act சட்டம்: CrPC — Sections பிரிவுகள்: 102

(ii) Act சட்டம்: Prevention of Corruption Act.1988 — Sections பிரிவுகள்: Sec. 7, 12

(iii) Act சட்டம்: as Amended by Prevention of Corruption (Amendment) Act 2018 — Sections பிரிவுகள்: —

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 01.11.2018
Date from : நாள் முதல் —
Date to : நாள் வரை —

Time Period : நேர அளவு Before 13.00 Hrs on 01.11.2018
Time from : நேரம் முதல் —
Time to : நேரம் வரை —

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 01.11.2018
Time நேரம் 21.45 Hrs.

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 22.02.2019
Time நேரம் 15.30 Hrs.

4. Type of Information : Written/ Oral : Written
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: RTO Office Kovilpatti
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் About 60 kms North East

Beat Number : முறைக் காவல் எண்
(b) Address முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. பெ. நந்தீஸ்வரன்
(b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : நாட்டினம்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்,
(g) Address : முகவரி திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டம், இருப்பு திருநெல்வேலி.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்.
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

(1) திரு. ராமவேல், உதவியாளர், வட்டார போக்குவரத்து அலுவலர் அலுவலகம், கோவில்பட்டி (2) திருமதி. பர்னாந்து அந்தோணியம்மாள் ராட்ரல், உதவியாளர் வட்டார போக்குவரத்து அலுவலர் அலுவலகம், கோவில்பட்டி மற்றும் 8 தனியார்கள் (தனிதாளில் இணைக்கப்பட்டுள்ளது)

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

துறை முன் அனுமதி பெற வேண்டி

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and ~~took up the investigation~~ / directed Tr. R. Aruthees Rank Inspector of Police to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

22.2.19

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

DSP 22/2/19
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

22.02.2019 at 17.00 Hrs

Name: பெயர் [illegible]
Rank: நிலை .....................No. எண் ..........
துணை காவல் கண்காணிப்பாளர்
[illegible]
[illegible] 22.02.2019

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)p 2

**Continuation of FIR in Thoothukudi V&AC Cr.No.3/2019 u/s 102 Cr.P.C and Sec.7, 12 of Prevention of Corruption Act 1988 as Amended by Prevention of Corruption (Amendment) Act 2018**
Submitted:

**Accused :**

1. Tr.Samuvel,
   Assistant,
   O/o the RTO, Kovilpatti,
   Thoothukudi District.

2. Tmt.Barnandhu Anthoniammal Chatras,
   Assistant,
   O/o the RTO, Kovilpatti,
   Thoothukudi District.

**Private Individuals:**

3. Tr.R.Thrumalikumar,
   S/o.Tr.Ramasubbu,
   No.1/148, Inam Maniyachi,
   Kovilpatti-628502.

4. Tr.T.Sermadurai,
   S/o.Tr.M.Thangamarippan,
   No.6/2828J, Mahalakshmi Nagar,
   Illayarasanendal Road,
   Kovilpatti-628502.

5. Tr.S.Subramanian,
   S/o.Tr.R.Subbiah,
   2nd St., Balaji Nagar, Manthithoppu Road, Kovilpatti.

6. Tr.C.Balamurugan,
   S/o Tr.P.Chella Pandian,
   No.1/114, West Street, Nalli,
   Sattur Taluk,
   Virudhunagar Dist.

7. Tr.K.Prabhu,
   S/o Tr.M.Kathirvel,
   No.22, Bungalow Street,
   Sattur, Virudhunagar Dist.

8. Tr.M.Muthukumar,
   S/o Tr.P.Marimuthu,
   No.5/47, North Ayvoipulipatti,
   Kurivikulam Post,
   Tirunelveli Dist.

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வாகனங்களை பதிவு செய்தல், ஓட்டுநர் உரிமம் வழங்குதல், வாகனங்களுக்கு தகுதி சான்று வழங்குதல் மற்றும் வாகனங்களுக்கு உரிமம் வழங்குதல் போன்ற அரசு பணிகளுக்கு ஓட்டுநர் பயிற்சி பள்ளி நடத்தும் நபர்கள் மற்றும் பொதுமக்களிடம் கையூட்டு பெறுவதாக கிடைத்த இரகசிய தகவலின் பேரில் 01.11.2018 –ஆம் தேதி பிற்பகல் 13.00 மணி முதல் 19.45 மணி வரை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திரு.பி.நந்தீஸ்வரன் அவர்களுடன் நடத்திய திடீர் சோதனையின் அடிப்படையில் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் கொடுத்த புகார் மனுவை 01.11.2018-ம் தேதி 21.45 மணிக்கு பெற்று இயக்குநரகம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை அவர்களுக்கு ஊழல் தடுப்பு சட்டம் பிரிவு 17(a) –ன்படி துறை தலைவரின் முன் அனுமதி பெற அனுப்பி வைத்து G.O. (D) No.145, Home (Tr.IIA) Department, dated 08.02.2019 -ன்படி முன் அனுமதி பெறப்பட்டது. அதன்படி

9. Tr.C.Balasubramanian,
   S/o Tr.K.Chelliah,
   No.6/669, Karadikulam,
   Kalugumalai Via, Kovilpatti Taluk,
   Thoothukudi Dist.

10. Tr.R.Ramamoorthy,
   S/o Tr.R.Ramasamy,
   No.6/251, Srinivasa Nagar,
   Athaikondan, Kovilpatti.

இன்று (22.02.**2019) 15.30** மணிக்கு நான் அலுவல**கத்தில்** பணியில் இருந்தபோது **தூத்துக்குடி** ஊழல் தடுப்பு மற்றும் **கண்காணிப்பு** பிரிவு குற்ற எண்.03/2019, பிரிவு **102 குவி**முச மற்றும் 7, 12 **Prevention** of Corruption Act 1988 as Amen**ded by** The Prevention of Corruption (Amendment) Act 2018 படி மார்ஜினில் **கண்ட 10** எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு :அனுப்புநர், ப.நந்தீஸ்வரன், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டம், இருப்பு திருநெல்வேலி. பெறுநர், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தூத்துக்குடி. அய்யா, பொருள் : திடீர் தணிக்கை அறிக்கை – **மேல்** நடவடிக்கை எடுக்கக் கோருவது தொடர்பாக. **இன்று 01.11.2018-ம் தேதி** மதியம் 01.00 மணிக்கு கோவில்பட்டி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் எனது தலைமையில் தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் போலீஸ் பார்ட்டி உதவியுடன் திடீர் தணிக்கை மேற்கொண்டதில் கோவில்பட்டி வட்டார போக்குவரத்து அலுவலர் அலுவலக அறையில் உதவியாளர் திரு.சாமுவேல் என்பவரின் மேஜையின் மேல் ரூ.32,930-ம், அதே அறையில் பி2 உதவியாளர் திருமதி.பர்னாந்து அந்தோனியம்மாள் சாட்ரஸ் என்பவர் மேஜை மேலிருந்த பி ரிஜிஸ்டரின் உள்ளே ரூ.20,000-ம் NP ரிஜிஸ்டர் உள்ளே ரூ.4000-ம் இருந்தது. வட்டார போக்குவரத்து அலுவலரின் அறை வாசல் அருகே நின்று கொண்டிருந்த திருமலைக்குமார் என்பவரிடமிருந்து ரூ.26,950-ம், வட்டார போக்குவரத்து அலுவலரின் அறைக்கு உள்ளே நுழையும் வாயில் அருகே நின்று கொண்டிருந்த திரு.T.சோமதுரை என்பவரிடம் ரூ.17,680, வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் எதிரே பெஞ்ஜின் அருகில் நின்று கொண்டிருந்த திரு.சுப்பிரமணியன் என்பவரிடம் ரூ.4,080-ம், மேற்படி அலுவலகத்தின் பணம் கட்டும் கவுண்டருக்கு அருகே நின்று கொண்டிருந்த திரு.பாலமுருகன் என்பவரிடமிருந்து ரூ.8,300-ம், மேற்படி அலுவலகத்தின் உள்ளே நின்று கொண்டிருந்த திரு.பிரபு என்பவரிடம் ரூ.11,500-ம், மேற்படி

அலுவலகத்திற்குள் நின்று கொண்டிருந்த திரு.முத்துக்குமார் என்பவரிடமிருந்து ரூ.3,740-ம், அதே அலுவலகத்தில் நின்று கொண்டிருந்த திரு.பாலசுப்பிரமணியன் என்பவரிடம் ரூ.8,930-ம், வட்டார போக்குவரத்து அலுவலக கட்டிடத்தின் கீழ்பகுதியில் அமைந்துள்ள மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.M.D.அமர்நாத் அவர்கள் அறையில் அவருக்கு அருகில் நின்று கொண்டிருந்த திரு.ராமமூர்த்தி என்பவரிடமிருந்து ரூ.15,870-ம் இருந்தது. மேற்படி பணத்திற்கு விளக்கம் கேட்க அவர்கள் விளக்கம் ஏற்றுக் கொள்ளும் விதத்தில் இல்லாததாலும், 01.11.2018 பகல் 15.00 மணி முதல் 19.45 மணி வரை தயார் செய்யப்பட்ட செயல்முறைகள் படி கைப்பற்றப்பட்டது. மேற்படி அலுவலக நபர்கள் மற்றும் தனி நபர்களிடம் சந்தேகபடும்படியாக இருந்ததால் அவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்கக் கேட்டுக் கொள்கிறேன். இத்துடன் செயல்முறை நடவடிக்கைகள் மற்றும் கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,53,980/- மற்றும் துண்டுச் சீட்டு ஆகியவற்றை தங்களிடம் ஒப்படைக்கிறேன். Sd/xxxxx, 01.11.2018, (ப.நந்தீஸ்வரன்) மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி. Sir, Received the complaint on 01.11.2018 at 21.45 hrs and on the basis of the prior permission accorded by the competent authority in G.O (D) No.145, Home (Tr.IIA) Department dated 08.02.2019 and also on the basis of the Memorandum of Director, Vigilance & Anti-Corruption, Chennai No.SC.40145/2018/TPT/TK, Dated 22.02.2019 received on 22.02.2019, I am registering a case in Thoothukudi V&AC Cr.No.03/2019, U/s 102 Cr.P.C and u/s 7, 12 of Prevention of Corruption Act 1988 as Amended by The Prevention of Corruption (Amendment) Act 2018, today on 22.02.2019 at 15.30 hrs. Sd/-xxxxx, G.Hector Dharma Raj, Deputy Superintendent of Police, V&AC, Thoothukudi. இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, திரு.பி.நந்தீஸ்வரன் அவர்களின் அசல் புகார் மனு மற்றும் கோவில்பட்டி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வைத்து தயார் செய்த செயல்முறைகள் மற்றும் பின் இணைப்பு 1 முதல் 11 வரை உள்ளதை இணைத்து மேன்மைமிகு தலைமை குற்றவியல் நடுவர் மற்றும் சிறப்பு நீதிமன்ற நடுவர், தூத்துக்குடி அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை வழக்கு

விசாரணைக்காக ஆய்வாளர் திரு.R.ஆதீஸ், காவல் ஆய்வாளர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தூத்துக்குடி அவர்களிடம் ஒப்படைக்கிறேன்.

(ஜா.ஹெக்டர் தர்ம ராஜ்)
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு (ம) கண்காணிப்பு துறை,
தூத்துக்குடி பிரிவு. 22.02.2019.